EXAMINATION UNIT
FACULTY OF ARTS AND
CULTURE
21 JAN 2019
Eastern University, Sri Lanka.

# கல்முனை தமிழ் பிரதேச செயலகப் பிரிவு மக்களின் வாழ்வியல் அம்சங்களையும் தொல்லியல் மூலங்களையும் ஆவணப்படுத்தல்

பெயர் : செல்வன். பாலசுந்தரம் சுரேஸ்

பதிவு இலக்கம் : EU/IS/2012/AC/82

சுட்டெண் : CS 4952

LIBRARY
07 SEP 2019
EASTERN UNIVERSITY, SRI LANKA.

இவ்வாய்வுக் கட்டுரையானது வரலாறு இளங்கலைமாணிச் சிறப்புக் கற்கைநெறியின் இறுதி வருடப் பரீட்சையில் ஓர் அலகாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்திற்குன் வரலாற்றுத்துறைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

FAC673
Project Report
Library - EUSL

வரலாற்றுத்துறை

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை

2018.

## முன்னுரை

இலங்கைத் திருநாடு தனக்கே உரித்தான தனித்துவமான வரலாற்றையும், பண்பாட்டையும் கொண்டு காணப்படுகிறது. ஈழத்துப் பண்பாடுகளோடு பிற நாட்டுப் பண்பாடுகள் கலப்புற்று, பல நாட்டுப் பண்பாடுகளோடு இணைந்த வகையில் ஈழத்தின் பண்பாடும், வரலாறும் கட்டியெழுப்பப்பட்டது.

இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்தில் அமைந்துள்ள அம்பாறை மாவட்டத்தின் கல்முனை தமிழ்ப் பிரதேசத்தினை மையப்படுத்தியதாக ஆய்வானது அமைகின்றது. அவ்வகையில் இப்பிரதேச மக்களது வாழ்விடப் பகுதிகளிலிருந்து கிடைத்த பலதரப்பட்ட சான்றாதாரங்கள், ஆவணக்குறிப்புக்கள் போன்றவற்றின் மூலம் வெளிக்கொண்டு வரப்பட்ட, குறிப்பிட்ட மக்களது வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், மக்கள் தொகை, குடும்ப சமூக உறவுகள், வாழ்விடங்கள், உணவு உற்பத்தி முறைகள், தொழில்கள், தொழில் நுட்ப வளர்ச்சி, சமய நம்பிக்கை, கலைமரபு, அழகியல், உள்நாட்டு வெளிநாட்டுத் தொடர்புகள் போன்றவை இவ்வாய்வுக்கு உறுதுணையாக அமைந்திருந்தன.

இப்பிரதேசத்தினை மாத்திரம் மையப்படுத்தி இதுவரை இலக்கிய ஆவணங்கள் அதிகம் வெளிவராத நிலையில் இப்பிரதேசத்தின் வரலாறு, பண்பாடு என்பன மறைக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. இந்நிலையில் இவ்வாய்வின் போது இப்பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட, கட்டட இடிபாடுகள், ஐரோப்பியர் கால கட்டுமானங்கள், வரலாற்றுப் பழமை வாய்ந்த ஆலயங்கள், மக்களின் பாவனைப் பொருட்கள், வாழ்வியல் எச்சங்கள், பாரம்பரிய வரலாற்றுச் சின்னங்கள் என்பன இப்பிரதேசத்தினது தொன்மையான வரலாற்றையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

வரலாற்றுத் தடயங்களைக் கொண்ட இப்பிரதேசத்தை மையப்படுத்தி இதுவரை முழுமையான தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத நிலையில், இப்பகுதியில் எதிர்காலத்தில் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுமிடத்து, இப்பிரதேசம் தொடர்பான உண்மைகள் வெளிவர வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. எமது பிரதேசத்தின் வரலாற்றை வெளிப்படுத்தி நிற்கின்ற தொல்பொருட் சின்னங்களை ஆய்வுக்குட்படுத்தி, ஆவணப்படுத்தும் ஓர் ஆரம்ப முயற்சியாகவே இவ்வாய்வானது அமைகின்றது. எதிர்காலத்தில் இது போன்ற ஆய்வு முயற்சிகளில் ஈடுபட இருக்கும் எமது எதிர்காலச் சந்ததியினருக்கு ஓர் வழிகாட்டலாக இவ்வாய்வு அமையும் என நம்புகின்றேன்.

-ஆய்வாளர்-

## பொருடளக்கம்


**விடயம்** **பக்கம்**

நன்றியுரை ........................................i

முன்னுரை ........................................ii

**அத்தியாயம் : 01**

ஆய்வு அறிமுகம் ........................................1-8

**அத்தியாயம் : 02**

கல்முனை தமிழ்ப் பிரதேசம் பற்றிய அறிமுகம் ........................................ 9-19

**அத்தியாயம் : 03**

கல்முனை தமிழ்ப் பிரதேச மக்களின் வாழ்வியல் அம்சங்கள் ...................... 20-40

**அத்தியாயம் : 04**

கல்முனை தமிழ்ப் பிரதேசத்தில் காணப்படும் தொல்லியல் மூலங்கள் ............41-69

முடிவுரை ........................................70-72

உசாத்துணை : ........................................73-75

பின்னிணைப்பு : ........................................iv-ix

அட்டவணை : 01 ........................................10